# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்

# தேர்தல் ஆணையம்

## கூட்டுறவுச் சங்கங்களின்

## தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல்

(நிர்வாகிகள் – **Office Bearers**)

## தேர்தல் அலுவலர்களுக்கான

## துணைக் கையேடு – 5

(அலுவலர்களின் பயன்பாட்டிற்கு மட்டும்)

# 2023

திரு.தயானந்த் கட்டாரியா, இ ஆ ப.,
ஆணையர்

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச்
சங்கங்களின் தேர்தல் ஆணையம்,
சென்னை – 600 018.

**உங்களுடன்**

அன்புடையீர்,

தன்னார்வ அமைப்புகளாகவும், (Voluntary Formation), தன்னாட்சி முறையில் (Autonomous Functioning) செயல்படுவதாகவும், மக்களாட்சி வழியிலான (Democratic Control) கட்டுப்பாடு மற்றும் தொழில் முறை மேலாண்மை (Professional Management) ஆகியவற்றை அடிப்படை நோக்கங்களாகவும் கொண்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் (Members of the Board) மற்றும் தலைவர்/துணைத்தலைவர் (Office Bearers) ஆகியோரின் தேர்தல்கள் மிகவும் முக்கியமானதும், சிறப்பானதும், பொறுப்பானதும் ஆகும்.

தமிழ்நாட்டில் தற்போது சுமார் 23,000–க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றின் நிர்வாகக் குழுக்களுக்கு சுமார் 2 லட்சத்திற்கும் அதிகமான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் (Vacancies) சுமார் 2 கோடிக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் (வாக்காளர்கள்) தேர்ந்தெடுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான இத்தேர்தல்கள் ஒரு மாபெரும் நிகழ்வாகும்.

இச்சங்கங்களின் தேர்தல்களை சுதந்திரமாகவும், நியாயமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் அமைதியாகவும், ஒழுங்காகவும், சட்ட விதிகளுக்குட்பட்டும் (Free, fair, Transparent, Peacefully, Orderly, as per Act, Rules and Bylaws) நடத்த வேண்டிய மாபெரும் சட்டபூர்வ பொறுப்பும் கடமையும் ஆணையத்திற்குள்ளது.

எனவே கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை நடத்திடும் பொறுப்பிலுள்ள அனைத்து அலுவலர்களும் இதனை உணர்ந்து தங்களுக்கேற்பட்ட சட்டபூர்வ கடமையினையும், பொறுப்பினையும், சிறப்பாகச் செய்திடுவார்கள் என்று ஆணையம் எதிர்பார்க்கிறது.

இவ்வகையில் ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ள இதர கையேடுகள், துணைக்கையேடுகள் மற்றும் சுற்றறிக்கை தொகுப்புகளுடன் ஆணையத்தின் இக்கையேடும் மிக்க பயன்தருவதாக அமையும் என்றும் ஆணையம் உறுதியாகக் கருதுகிறது.

வாழ்த்துக்களுடன்,

நாள் : 03.02.2023

(தயானந்த் கட்டாரியா)

## உள்ளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | பொது | 1 |
| 2 | சங்கங்களின் பிரிவுகளும் வகைகளும் | 2 |
| 3 | சங்க அமைப்பு | 3 |
| 4 | நிர்வாகக்குழு | 6 |
| 5 | நிர்வாகக்குழு உறுப்பினர்கள் | 11 |
| 6 | தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல் | 13 |
| 7 | இணைப்புகள் (1 முதல் 15 வரை) | 28–68 |

**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்**
**தேர்தல் ஆணையம்**

# தேர்தல் அலுவலர்களுக்கான துணைக் கையேடு –5
**(அலுவலர்களின் பயன்பாட்டிற்கு மட்டும்)**

## கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் / துணைத்தலைவர் தேர்தல் (நிர்வாகிகள்-Office Bearers)

**1. பொது**

**1.1. மூன்றடுக்குகள் ( 3 Tier setup)**

**1.1.1.** தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள், தொடக்க (Primary), மைய (Central) மற்றும் தலைமை (Apex) கூட்டுறவுச் சங்கங்கள் என மூன்று அடுக்குகளாக (Tier), பல்வேறு பிரிவுகளில் (category) செயல்பட்டு வருகின்றன.

**1.1.2.** இம்மாதிரியான மூன்று அடுக்கு முறையில் சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் (Board Member) மற்றும் நிர்வாகிகள் (Office Bearers) தேர்தல்கள் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை விளக்கும் வகையில், 1983-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் மற்றும் 1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகளில்

சொல்லப்பட்டவற்றை அனுசரித்து, இக் கையேட்டில் விவரங்கள் மற்றும் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

**1.1.3.** இக்கையேட்டில் சொல்லப்பட்டவை சட்டம் மற்றும் விதிகளில் சொல்லப்பட்டவற்றின் அடிப்படையில் அளிக்கப்பட்ட விளக்கங்களாகும். இதில் ஐயம் ஏதும் எழுமானால், சட்டம் மற்றும் விதிகளில் சொல்லப்பட்டவைகளையே கைக்கொள்ளவேண்டும்.

## 2. சங்கங்களின் பிரிவுகளும் (categories) வகைகளும் (classes)

### 2.1. சங்கங்களை வகைப்படுத்துதலும் பிரிவுகள் ஏற்படுத்துதலும்

**2.1.1.** சங்கங்களின் நோக்கம், செயல் எல்லை, உறுப்பினர்கள் மற்றும் இவை தொடர்பாக விதிகளில் சொல்லப்பட்டவற்றின் அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்கள் இனம் பிரிக்கப்பட்டு வகைப்படுத்தப்படுகின்றன.

**2.1.2.** சங்கம் பதிவு செய்யப்பட்ட பிறகு சங்கத்தின் துணை விதிகளில்

(By-laws) குறிப்பிடப்பட்டுள்ள முதன்மை நோக்கத்தினை (Principal object) கருத்தில் கொண்டு சங்கத்தின் இனம் பிரித்தலும் வகைப்படுத்துதலும் இருக்கும்.

(உ.ம்) (விதி எண் 14—ல் கண்டுள்ளவாறு)

| பிரிவு | வகை |
|---|---|
| கடன் வழங்கும் சங்கம் | (i) விவசாய சேவைச் சங்கம்<br>(ii) வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி<br>(iii) நிதி உதவி வங்கி<br>(iv) நகர வங்கி<br>(v) நகர கடன் சங்கம்<br>(vi) பணியாளர்கள் கடன் சங்கம் |

**2.1.3.** பல்வேறு வகைச் சங்கங்களின் பிரிவுகளும் வகைகளும் தனியே தரப்பட்டுள்ளன. (இணைப்பு -1)

**3. சங்க அமைப்பு (Constitution)**

**3.1. பொதுக் குழு (General Body)**

**3.1.1.** தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள், மீனவர், நெசவாளர் மற்றும் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் போன்று கிராமங்கள் அளவில் அமைந்துள்ள தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் பொதுக்குழு பொதுவாக **தனிநபர்களை மட்டிலுமே (individuals) உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும்.**

**3.1.2.** கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் போன்ற வட்ட (Taluk) அளவில் அமைந்துள்ள தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் **நிதி வங்கி (Financing Bank) தவிர்த்த இதர மையக் கூட்டுறவுச் சங்கங்களின் பொதுக்குழு தனி நபர்களுடன் சங்கங்களையும் உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும்.**

**3.1.3.** நிதி வங்கிகள் மற்றும் தலைமைச் சங்கங்கள் ஆகியவற்றின் பொதுக்குழு, **சங்கங்களை மட்டிலுமே உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும். தனி நபர்கள் உறுப்பினர்களாக (members) இருக்க மாட்டார்கள்** (சட்டப்பிரிவு **21 (1)** (a)).

**3.1.4** அனைத்து அடுக்குகளிலுமுள்ள (Tier) சங்கங்களின், மேலே குறிப்பிட்டவாறு அமைந்துள்ள பொதுக்குழு உறுப்பினர்களில் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள் (voters) அச்சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்களைத் தேர்ந் – தெடுக்கிறார்கள். தனி நபர்கள் வாக்காளர்களாக இருப்பின் அவர்களும், சங்கங்கள் உறுப்பினர்களாக இருப்பின் அச்சங்கங்களின் பிரதிநிதிகளும் (Delegates) இந்த நிர்வாகக்குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கிறார்கள்.

**3.1.5.** ஒரு வகை சங்கத்தில் மற்றொரு சங்கம் உறுப்பினராக இருப்பின், அம்மற்றொரு சங்கமானது முதற் சொன்ன சங்கத்தின் வகையைச் சேர்ந்ததாக இருப்பின் அம்மற்றொரு

சங்கத் தலைவரும், அம்மற்றொரு சங்கம் இதர வகைச் சங்கமாக இருப்பின் அம்மற்றொரு சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்களால் அவர்களுக்குள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவரும் முதற்சொன்ன சங்க பிரதிநிதியாக இருப்பார்கள். (சட்டப் பிரிவு 26(2))

**3.1.6.** இவ்வாறு பொதுக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒருவரை தலைவராகவும் ஒருவரை துணைத் தலைவராகவும் தங்களின் சங்கம் உறுப்பினராக உள்ள இதே வகையல்லாத பிற வகைச் சங்கங்களுக்கு தங்கள் சங்கத்தின் சார்பாக பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்கின்றனர். இச் சங்கத்தின் தலைவர் அதே வகைச் சங்கத்திற்கு இச்சங்கத்தின் பிரதிநிதியாக இருப்பார். நிர்வாகக்குழுவினால் இவர் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியதில்லை. (சட்டப்பிரிவு 26(2) விதி 53-A)

**3.2. பிரதிநிதிகளின் பதவிக்காலம்**

**3.2.1.** இவ்வாறு ஒரு சங்கத்திலிருந்து மற்றொரு சங்கத்திற்கு பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரின் பதவிக்காலமானது தேர்ந்தெடுத்த அச்சங்கத்தின் தலைவர் அல்லது நிர்வாகக்குழு உறுப்பினர் பதவிக்கால மாகவே இருக்கும்.

**3.2.2.** இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியின் காலம் தேர்ந்தெடுத்த சங்கத்தில் முடிவுற்றாலும், எவ்வகையிலும் **5** ஆண்டுகளுக்கு அதிகமாக இல்லாத வகையில், அவருக்குப் பதிலாக வேறு ஒருவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை அச் சங்கத்தின் பிரதிநிதியாகத் தொடர்ந்து நீடிப்பார். இருந்தபோதிலும், சட்டப்பிரிவு **88** அல்லது **89**ன் கீழ் இவரைத் தேர்ந்தெடுத்த சங்கத்திற்கு ஒர் ஆட்சியாளர் (Administrator) நியமிக்கப்படும் நிலையிலும், அல்லது சட்டப்பிரிவு **138**ன் கீழ் ஒர் கலைத்தல்அலுவலர் (Liquidator) நியமிக்கப்படும் நிலையிலும், இவர் பிரதிநிதியாக தொடர இயலாது (Ceases) (விதி**56**). குறுகிய கால கடன் கூட்டுறவு அமைப்பு சங்கங்களை பொறுத்தவரை சட்டப்பிரிவு **136** D **(11)**–ல் கூறப்பட்டது போல் இருக்கும்.

**3.2.3.** கூட்டுறவுச் சங்கங்களின் முன்றடுக்கு முறை, அவற்றின் பொதுக்குழு, நிர்வாகக்குழு தலைவர் மற்றும் பிரதிநிதிகள் பற்றிய விபரம் தனியே தரப்பட்டுள்ளன (இணைப்பு -2)

### 4. நிர்வாகக்குழு (சட்டப்பிரிவு 33)

### 4.1. தேர்தல் வழி (Election)

**4.1.1.** தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர் எண்ணிக்கை ஏழுக்குக் குறையாமலும் இருபத்தி

ஒன்றுக்கு அதிகப்படாமலும், மைய மற்றும் தலைமைச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர் எண்ணிக்கை பதினொன்றுக்கு குறையாமலும் இருபத்தி ஒன்றுக்கு அதிகப்படாமலும் இருக்கும்.

**4.1.2.** விதி எண் **59–**ன்படி அட்டவணையிடப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழுவானது அட்டவணை **II–**ல் குறிப்பிட்டவாறு இருக்கும்.

## 4.2. இசைந்து தேர்வு (Co-option)

**4.2.1.** நிர்வாகக்குழு உறுப்பினர்களாக, சங்கத்தின் நோக்கம் மற்றும் செயல்பாட்டினைஒட்டி அவற்றில் அனுபவம் கொண்டவர்களை இரு நபருக்கு அதிகப்படாமல் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் இசைந்து தேர்வு செய்து கொள்ளலாம்.

## 4.3. செயல் இயக்குனர்கள் (Functional Directors)

**4.3.1.** விதிகள் மற்றும் துணை விதிகளில் ஏற்படுத்தப்பட்டபடியும் அட்டவணை II – படியும் சங்க நிர்வாகக் குழுவில் ஒன்பது எண்ணிக்கைக்கு மிகாமல் செயல் இயக்குனர்கள் இருக்கலாம்.

## 4.4. வாக்களிக்கும் தகுதி

**4.4.1.** இசைந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் (Co-opted members) மற்றும் செயல் இயக்குனர்கள் (Functional Directors) நிர்வாகக் குழுக் கூட்டங்களில் கலந்து கொண்டு

வாக்களிக்கத் தகுதி பெற்றவர்களாவார்கள். ஆனால் சங்கத்தின் தேர்தல்களில் போட்டியிடவோ வாக்களிக்கவோ இயலாது.

## 4.5. பெண்கள், பட்டியல் இனம் மற்றும் பட்டியல் பழங்குடியினர் ஒதுக்கீடு

**4.5.1.** ஒவ்வொரு சங்கத்தின் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிர்வாகக்குழு உறுப்பினர்களில் முப்பது சதவீதம் பெண்களுக்கும் மற்றும் பதினெட்டு சதவீதம் பட்டியல் இனம் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்.

**4.5.2.** ஒரு சங்கத்தில் பெண்களோ அல்லது பட்டியல் இனம் மற்றும் பட்டியல் பழங்குடியினர் அல்லது இரு வகையிலுமே உறுப்பினர்கள் இல்லையென்றால், அவ்வகை அல்லது வகைகளுக்கான ஒதுக்கீட்டு இடங்களைப் பொது இடத்திற்கான இடங்களாகக் கொள்ளலாம் (அரசாணை எண்.49, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை (CJ1) நாள் 04.04.2013)

**4.5.3.** தனிநபர் உறுப்பினர்கள் எவருமின்றி, சங்கங்கள் மட்டிலுமே உறுப்பினர்களாக உள்ள மைய அல்லது தலைமைச் சங்கத்தில், பெண்கள், பட்டியல் இனம் மற்றும் பட்டியல்

பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் இவ்வாறு இணைந்துள்ள (affiliated) உறுப்பினர் சங்கங்களின் நிர்வாகக்குழுவில் உறுப்பினர்களாக உள்ள இவ்வகையான மைய அல்லது தலைமைச் சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினராவதற்கு சட்டம் விதிகளின்படி தகுதியுள்ள, பெண்கள், பட்டியல் இனம் மற்றும் பட்டியல் பழங்குடியினர் ஆகியோரடங்கிய பட்டியலில் இருந்து தேர்தல் மூலம் நடைபெறும்.

**4.5.4.** இப்பட்டியலை, இவ்வகையான மைய அல்லது தலைமைச் சங்கம் வாக்குப்பதிவிற்கு பத்து தினங்களுக்கு முன்பாக, வாக்காளர் பட்டியல் அலுவலருக்கு (Electoral Officer) அனுப்ப வேண்டும்.

**(விதி எண் 52(7–A))**

## 4.6. அட்டவணைப்படுத்தப்பட்ட சங்கங்கள் (Scheduled Co-operative Societies)

4.6.1. அனைத்து அடுக்கு (tier) களிலும், குறிப்பிட்ட சங்கங்கள் அவற்றின் செயல்பாட்டினைப் பொறுத்து அட்வணைப்படுத்தப்பட்டுள்ளன. அட்டவணைப் படுத்தப்பட்ட சங்கங்களின் நிர்வாகக் குழுவின் அமைப்பு, உறுப்பினர்கள் எண்ணிக்கை அவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை பற்றி அந்த அட்டவணையில் சொல்லப்பட்டபடியே இருக்கும். **(விதி எண் 59)**

**4.6.2.** அட்டவணைப்படுத்தப்பட்ட சங்கங்கள் மற்றும் அவற்றின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை பற்றிய சுருக்க விவரம் இணைப்பில் தரப் பட்டுள்ளது. (இணைப்பு-3)

**4.7. மூன்றடுக்குகளுக்கான தேர்தல்கள்**

**4.7.1.** ஒரு நிலையிலுள்ள (உ-ம்) தொடக்க சங்கங்களின் தேர்தல்கள் முடிவுற்ற பின்னரே அதனடிப்படையில், அதற்கு அடுத்த நிலையிலுள்ள மைய, தலைமை சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தலைவர், துணைத் தலைவர் மற்றும் பிரதிநிதிகள் தேர்தல்கள் இருக்கும். எனினும் ஒரு நிலையிலுள்ள அனைத்து சங்கங்களின் தேர்தல்கள் முழுவதுமாக முடிவுற்ற பின்னர்தான் அடுத்த நிலை சங்கங்களின் தேர்தல் நடத்த வேண்டும் என்பது சட்டப்பூர்வ அவசியமன்று.

**4.7.2.** இதனடிப்படையில் மூன்று நிலைகளுக்கான தேர்தல்கள், தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்படுகின்றன. (இணைப்பு – 4)

**5. நிர்வாகக் குழு உறுப்பினர்கள்**

**5.1. ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினராக இருத்தல்**

**5.1.1.** எந்த ஒரு நபரும் ஒரே நேரத்தில் **ஐந்துக்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்களில் நிர்வாகக்குழு உறுப்பினராக முடியாது.** (சட்டப்பிரிவு **34 (4)** (a)

**5.1.2.** ஒரே நேரத்தில் ஒருவர் **இரண்டிற்கும் மேற்பட்ட தலைமைச் சங்கங்கள்** (apex societies ) அல்லது **இரண்டிற்கும் மேற்பட்ட மையச் சங்கங்களின்** (Central Societies) **நிர்வாகக் குழு உறுப்பினராக இருக்க இயலாது.**

(சட்டப்பிரிவு **34 (4)** (b))

**5.2. தொடக்கக் கூட்டுறவுச் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல்**

**5.2.1.** தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்களின் தேர்தல்கள் தொடர்பாக, உறுப்பினர் பட்டியல், வாக்காளர் பட்டியல், வேட்பு மனுதாக்கல், பரிசீலனை, போட்டியிடும் வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல், வாக்குப் பதிவு மற்றும் வாக்கு எண்ணுகை போன்றவை தொடர்பான அறிவுரைகள், தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களின்

பயன்பாட்டிற்காக கீழே தரப்பட்டபடி தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

**(1) தேர்தல் அலுவலர்களுக்கான கையேடு (தேர்தல் செயலாக்கம்)**

**(2) தேர்தல் அலுவலர்களுக்கான துணைக்கையேடு – 1 (வேட்பு மனுக்கள்)**

**(3) தேர்தல் அலுவலர்களுக்கான துணைக்கையேடு – 2 (வாக்காளர் பட்டியல்)**

**(4) தேர்தல் அலுவலர்களுக்கான துணைக்கையேடு – 3 (வாக்குப் பதிவு)**

**(5) தேர்தல் அலுவலர்களுக்கான துணைக்கையேடு – 4 (வாக்கு எண்ணுகை)**

**5.2.2.** இத்துடன், போட்டியிடும் வேட்பாளர்களுக்கு உதவிடும் வகையில் **வேட்பாளர் கையேடும்** தேர்தல் ஆணையத்தால் தனியாக வெளியிடப் பட்டுள்ளது

**5.3. மைய மற்றும் தலைமைச் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல்**

**5.3.1.** நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல் தொடர்பாக, உறுப்பினர் பட்டியல், வாக்காளர் பட்டியல், வேட்பு மனு தாக்கல், பரிசீலனை, போட்டியிடும் வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல், போட்டிஇருப்பின் வாக்குப்பதிவு, வாக்கு எண்ணுகை மற்றும்

முடிவு அறிவித்தல் போன்ற அனைத்திலும் வேறு வகையாகச் சொல்லப்பட்டாலன்றி அக்கையேடுகளில் சொல்லப்பட்ட விபரங்கள் மைய மற்றும் தலைமைச் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தலுக்கும் பொதுவானதாக இருக்கும்.

**5.3.2.**அட்டவணைப்படுத்தப்பட்ட சங்கங்களின் (Schedule-II-Part A&B) நிர்வாகக்குழு உறுப்பினர்களின் தேர்தல் அந்த அட்டவணைகளில் சொல்லப்பட்டபடி இருக்கும்.

## 6. தலைவர் மற்றும் துணைத்தலைவர் (நிர்வாகிகள்-Office Bearers) தேர்தல் (விதி எண் 53)

**6.1. பொது**

**6.1.1.** ஒவ்வொரு அடுக்கிலும், உள்ள பொதுக்குழுவின் உறுப்பினர்கள் தனி நபர் மற்றும் சங்கத்தின் பிரதிநிதிகள் (Delegates) பற்றியும் அவர்கள் நிர்வாகக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது, மற்றும் அந்த நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தலைவர் துணைத்தலைவர் மற்றும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுப்பது பற்றியும் அட்டவணைப்படுத்தப் பட்ட சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பற்றியும் ஏற்கெனவே முன் பத்திகளில் கூறப்பட்டுள்ளன.

**6.1.2.** ஒருவர் மூன்று சங்கங்களுக்கு மேல் தலைவராக இருக்க இயலாது.

(சட்டப்பிரிவு **34 (7)**)

**6.1.3.** கூட்டுறவுச் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்களின் தேர்தல்களுக்கு அடுத்த கட்டமாக நிர்வாகிகள் தேர்தல் உள்ளது. நிர்வாகிகள் எனப்படுவர், சங்க நிர்வாகக்குழுவின் உறுப்பினர்களால் தங்களுக்குள் சங்க நிர்வாகக்குழுவிற்கு தலைவர் (President) மற்றும் துணைத்தலைவராக (Vice President) தேர்ந்தெடுக்கப்படுவர்கள் ஆவர். அவர்களைப் பெருந்தலைவர் (Chair persons) மற்றும் துணைப் பெருந்தலைவர் (Vice Chair Person) போன்ற வேறு எந்தப் பெயரிட்டழைத்தாலும் அவர்கள் தலைவர் மற்றும் துணைத்தலைவர் என்றே கருதப்படுவர்.

**6.2. தேர்தலுக்கான கூட்டம் (Meeting)**

**6.2.1.** ஒரு சங்கத்தின் துணைவிதிப்படி ஒரு நிர்வாகக்குழு கூட்டத்திற்கான சிற்றெண்ணிற்கும் (Quorum) குறைவாக (Less than the quorum) தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை இருக்குமென்றால் தலைவர்/துணைத்தலைவர் தேர்தல் நடத்துவதற்கான கூட்டம் கூட்ட வேண்டிய அவசியம் இல்லை. (இது பற்றிய ஆணையத்தின் சுற்றறிக்கை ந.க.1131/2013/கூதே5 நாள் 10.04.2013 (இணைப்பு –14)

**6.2.2.** தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகவும் மற்றும் ஒருவரை துணைத்தலைவராகவும் (ரகசிய வாக்கெடுப்பு மூலம்) தேர்ந்தெடுப்பார்கள்.

**6.2.3.** இதற்கான கூட்டமொன்றை, கூட்டுவதற்கு மாவட்ட தேர்தல் அலுவலரால் நியமனம் செய்யப்பட்ட (நியமன ஆணை – மாதிரி படிவம் **இணைப்பு -5)** தேர்தல் அலுவலர், ஏற்பாடுகள் மேற்கொள்வார். தேர்தல் அலுவலரால் பணியினை மேற்கொள்ள இயலாத நிலையில் மாற்று தேர்தல் அலுவலர் இதனை மேற்கொள்வார்.

**6.2.4.** இக்கூட்டம் சங்க அலுவலகம் இருக்கும் இடத்திலோ அல்லது சங்கத் தலைமையிடத்தில் வாக்காளர்கள் அனைவரும் வரக்கூடிய ஓர் பொது இடத்திலோ நடைபெறும்.

**6.3. கூட்ட அறிவிப்பு**

6.3.1. இக்கூட்டம் கூட்டப்படுவதற்கு குறைந்தபட்சம் மூன்று முழு நாட்கள் அறிவிப்புத் தரவேண்டும். **(இணைப்பு – 6)**

6.3.2. இக்கூட்டத்திற்கான அறிவிப்பு தேர்தல் அலுவலரால் நிர்வாகக்குழு உறுப்பினரிடம் நேரிடையாகக் கொடுத்தோ அல்லது வழங்கியோ நிர்வாகக்குழு (உறுப்பினர் காணப்படாத நிலையில்) அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த வயது வந்த

குடும்ப உறுப்பினரிடம் அவருடைய ஒப்புகை பெற்று கொடுக்கவோ அல்லது வழங்கவோ வேண்டும்.

6.3.3. இந்த அறிவிப்பு சங்க அலுவலகத்தில் உள்ள அறிவிப்பு பலகையிலும் வெளியிட்டிருக்கப்படவேண்டும்.

6.3.4. சங்கத் தலைமை நிர்வாக அலுவலரையோ (Chief Executive Officer), அவர் இல்லாத நிலையில் சங்கத் தலைவரையோ, இத்தேர்தலுக்கான அறிவிப்பை தேர்ந்தெடுக்கப்பட்ட, நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ள தேர்தல் அலுவலர் கேட்டுக்கொள்ளலாம்.

6.3.5. இந்த அறிவிப்பு அனுப்புவதற்கு செலவுகள் ஏதேனும் இருப்பின் அதனைச் சங்கம் ஏற்கவேண்டும்.

**6.3.6.** விதி **53(2)**ன் கீழ் கூட்டப்பட்ட இக்கூட்டத்திற்கு தேர்தல் அலுவலர் தலைமை வகிப்பார்.

**6.4. தனித்தனி ஏற்பாடுகள்**

**6.4.1.** தலைவர் மற்றும் துணைத்தலைவர் ஆகிய இரு தனித்தனி பதவிகள் இருப்பதினாலும் அவற்றிற்கான தேர்தல்களும் தனித்தனியே இருப்பதினாலும், வேட்பு மனுத்தாக்கல் முதல் முடிவு அறிவித்தல் உள்ளிட்ட அனைத்து தேர்தல் நடவடிக்கைகளும், அந்தந்தப் பதவிகளுக்கென தனியாக (Separetely) ஆனால் ஒரே சமயத்தில் (Simultaneously)

நடைபெறும். போட்டியிடக் கூடிய வேட்பாளர்களின் எண்ணிக்கையினை கணக்கிற்கொண்டு தேர்தல் அறிவிப்பில் ஒவ்வொரு நடவடிக்கைக்கான நேரங்களை நிர்ணயிக்க வேண்டும்.

## 6.5. வேட்பு மனு

**6.5.1** நிர்வாகிக்கான தேர்தலுக்கான வேட்புமனு, படிவம் **23**ல் **(**இணைப்பு**–7)** இருக்கவேண்டும். இந்த வேட்புமனுவினை, தேர்தல் அலுவலரிடம், வேட்பாளரோ அல்லது அவரை முன்மொழிபவரோ அல்லது வழிமொழிபவரோ, நேரிடையாகக் கொடுக்க வேண்டும். இதனைப் பெற்றதற்கு ஒரு ஒப்புகைச் சீட்டை வழங்க வேண்டும். (படிவம் **இணைப்பு – 8)**

**6.5.2** வேட்பு மனுக்கள் மீது மறுப்புகள் ஏதேனும் தெரிவிக்கப்படும் நிலையில், தேவையென்று கருதினால், அதன் மீது அவர் ஒர் சிறிய அளவு விசாரணை (summary enquiry) மேற்கொண்டு, எழுத்து மூலமாக முடிவெடுத்து (decide in writing), போட்டியிடத் தகுதியுள்ள வேட்பாளர் அல்லது வேட்பாளர்கள் பெயரை அறிவிக்கவேண்டும். **(இணைப்பு - 9)** எந்த வேட்பாளரும் தனது வேட்புமனுவினை, அவரே நேரில் (in person) தேர்தல் அலுவலரிடம், தனது கையொப்பமிட்ட ஒர் அறிவிப்பை (notice signed by him) வழங்கி, திரும்பப் பெற்றுக்

கொள்ளலாம்; **(இணைப்பு - 10 )** அல்லது அவரை முன்மொழிந்தவரோ அல்லது வழி மொழிந்தவரோ வேட்பு மனு தாக்கல் முடிந்தவுடன் வேட்புமனு திரும்பப் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள்ளாக அதனைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். வேட்புமனு திரும்பப் பெறுவதற்கான அறிவிப்பினை ஒரு முறை தந்துவிட்டால் அதுவே இறுதியானதாகும் (final).

**6.6. போட்டியின்றி தேர்வு**

6.6.1. எந்த ஒரு பதவிக்கும், தகுதியுள்ள வேட்பாளர் ஒருவருக்கு மேல் இல்லை என்றால் அத்தகுதியுள்ள வேட்பாளரையே முறையாகத் தேர்வு செய்யப்பட்டவராக தேர்தல் அலுவலர் அறிவிக்கவேண்டும். **(இணைப்பு – 11**)

**6.7. வாக்குப்பதிவு**

6.7.1. தகுதியுள்ள வேட்பாளர் ஒருவருக்கு மேல் இருப்பாரெனில், ஒவ்வொரு தகுதியுள்ள வேட்பாளருக்கும், ஆங்கில அகர வரிசைப்படி அவர்கள் பெயர் வரிசையில், வரிசை எண் ஒதுக்கி உடனடியாக வாக்குப்பெட்டி மற்றும் வாக்குச்சீட்டுகள் வழங்கி (provide) வாக்குப்பதிவு நடத்திட ஏற்பாடு செய்யவேண்டும். வாக்குப்பதிவு நடைபெறும் தேர்தலில், கீழ்வரும் முறையில், இரகசியமான வாக்குப்பதிவாக (secret

ballot) இருக்கவேண்டும். மாற்றாள் முறையில் (proxy) வாக்குப்பதிவு இருத்தல் கூடாது.

(1) தகுதியுள்ள வேட்பாளர்களின் பெயர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வரிசை எண்களுடன் கூட்டம் நடக்கும் இடத்தில் (place of meeting) நன்கு தெரியும்படியாக (prominently வெளியிடப்படவேண்டும்.

(2) ஒவ்வொரு வாக்குச் சீட்டிலும், ஒவ்வொரு பதவிக்கும் (office) போட்டியிடும் தகுதியான வேட்பாளருக்கு ஒதுக்கப்பட்ட வரிசை எண் இருக்கவேண்டும்; தேர்தல் அலுவலரின் முத்திரையுடன் கூடிய ஒப்பமும் இருத்தல் வேண்டும்.

(3) உறுப்பினர்கள் வாக்குச்சீட்டில் அவர்கள் வாக்களிக்க விரும்புவோரின் வரிசை எண்ணுக்கு எதிரே உரிய குறியீடு ( X அல்லது + ) செய்து அதனை வாக்குப்–பெட்டியில் போட (put) வேண்டும்.

(4) வாக்குச் சீட்டுகள் எண்ணிக்கை அதிகபட்சமாக 21 வரை தான் இருக்குமாதலால் இவ்வாக்குச் சீட்டிற்கான ஒரு பிரதியினைத் கையால் எழுதியோ அல்லது தட்டச்சு மூலமாகவோ தயாரித்து, பின்னர்

தேவையான எண்ணிக்கையில் நகல்கள் எடுத்து வழங்கலாம். (மாதிரி வாக்குச் சீட்டு **இணைப்பு – 12)**

6.7.2. ஒரு உறுப்பினரின் ஒட்டுப்போடும் உரிமை பற்றி ஏதேனும் மறுப்புகள் இருக்குமெனில் தேர்தல் அலுவலர் தேவையென்று கருதினால் அதன் மீது ஒர் சிறிய அளவு விசாரணை (summary) மேற்கொண்டு எழுத்து மூலமான முடிவெடுத்தல் வேண்டும்.

**6.8. வாக்குப் பெட்டி**

**6.8.1.** சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட வாக்குப் பெட்டிகளில் ஒன்றையே இதற்கும் பயன்படுத்தலாம். இந்த வாக்குப் பெட்டியினையும் போட்டியிடும் வேட்பாளர் அல்லது அவரது வழி மொழிபவர் / முன்மொழிபவர் ஆகியோர் அங்கிருப்பின் அவர்களது முன்னிலையில் நன்கு திறந்து காட்டி, வாக்குப் பெட்டி காலியாகவே உள்ளது என்பதைத் தெளிவு படுத்தி பின்னர் நன்கு மூடி தேர்தல் அலுவலர் தனது முத்திரையினை இடுவதுடன் விரும்பும் வேட்பாளர்கள் வழி மொழிபவர் / முன் மொழிபவர் ஆகியோரின் முத்திரையினையும் இட அனுமதிக்க வேண்டும். இவ் வாக்குப் பெட்டிக்கு தாள் முத்திரை (paper seal) தேவையில்லை.

**6.9. வாக்கு எண்ணுகை**

6.9.1. உறுப்பினர்கள் தங்களது வாக்குப்பதிவினை மேற்கொண்ட உடன், தேர்தல் அலுவலர், வாக்குப்பெட்டியை அங்கிருக்கும் வேட்பாளர் / முன் மொழிபவர் / வழி மொழிபவர் ஆகியோர் முன்னிலையில் திறந்து பதிவான வாக்குகளை எண்ணவேண்டும்.

6.9.2. கீழ்வரும் நேர்வுகளில் ஓர் வாக்குச்சீட்டு நிராகரிக்கப்பட வேண்டும் (reject)

**(1)** வாக்குச் செய்த உறுப்பினரின் அடையாளம் தெரியும் வகையில் ஏதாவது குறியீடு (mark); அல்லது

**(2)** அதில் வாக்கு ஏதும் பதிவு செய்யப்படாதது; அல்லது

**(3)** ஒன்றுக்கும் மேலான வேட்பாளருக்கு வாக்குகள் அளித்திருப்பது; அல்லது

**(4)** தேர்தல் அலுவலரால், வழங்கப்படாத வாக்குச் சீட்டு; அல்லது

**(5)** எந்த வேட்பாளருக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது என்று சந்தேகம் தரும் வகையில் முத்திரையிடப் பட்டுள்ளது; அல்லது

(6) தேர்தல் அலுவலரின் முத்திரையுடன் கூடிய கையொப்பம் இல்லாதது; அல்லது

(7) உண்மையான (genuine) வாக்குச் சீட்டுதானா என்று அறிய முடியாத அளவிற்கு சிதைந்தோ, சேதமடைந்தோ இருப்பது.

6.9.3. மேலே இனம் (7)ல் சொல்லப்பட்ட குறையானது தேர்தல் அலுவலரின் தவறுதலினாலோ (mistake) அல்லது விடுதலினாலோ, (failure) ஏற்பட்டுள்ளது என்று தேர்தல் அலுவலர் கருதும் நிலையில், அக்காரணம் பற்றி மட்டும் அந்த வாக்குச்சீட்டு நிராகரிக்கப்படக் கூடாது.

6.9.4. வாக்குச்சீட்டில், குறிப்பிட்ட வேட்பாளருக்குத்தான் வாக்காளர் வாக்களிக்க விருப்பப்பட்டுள்ளார் என்பது தெளிவாக அறியக்கூடிய நிலையில், அவரது முத்திரை (mark) தெளிவாக இல்லை, ஒரு தடவைக்குமேல் முத்திரை இடப்பட்டுள்ளது என்ற காரணங்களினால் மட்டும் அந்த வாக்குச்சீட்டினை நிராகரித்தல் கூடாது .

6.9.5. வாக்குச்சீட்டினை தள்ளுபடி (reject) செய்யும் அதிகாரம் கொண்டவர் தேர்தல் அலுவலரே.

**6.10.முடிவு அறிவித்தல்**

**6.10.1.** வாக்கு எண்ணிக்கை முடிவுற்ற உடன், ஒவ்வொரு வாக்காளரும் பெற்றுள்ள செல்லத்தக்க வாக்குகளை

தெரிவித்து செல்லத்தக்க வாக்குகளை அதிக எண்ணிக்கையில் பெற்றுள்ள வேட்பாளரைத் தேர்வு பெற்றவராக அறிவிக்க வேண்டும். சம எண்ணிக்கையில் வாக்குகள் உள்ள நேர்வில், தேர்தல் அலுவலர் குலுக்கல் முறையில் (by lot) தேர்தல் முடிவினை தீர்மானிக்க (decide) வேண்டும். (படிவம் - **இணைப்பு – 13)**

**6.10.2.** தேர்தல் அலுவலர், இதற்கென தனியான ஓர் பதிவேட்டில் தேர்தல் முடிவுகளை பதிவு செய்து கையொப்பமிடல் வேண்டும்.

**6.10.3.** முறையாக, தலைவர் மற்றும் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களின் பெயர்கள் சங்க அலுவலகத்தின் அறிவிப்பு பலகையில் வெளியிடப்பட வேண்டும்.

**6.10.4.** தேர்தல் முடிவு பெற்ற உடன், தேர்தல் அலுவலர், தேர்தல் முடிவுகளை, சங்கத்திற்கும், தேர்தல் ஆணையம், மாநில தேர்தல் அலுவலர், மாவட்ட தேர்தல் அலுவலர், ஆகியோருக்கும் அனுப்ப வேண்டும்.

**6.11. தேர்தல் அலுவலரால் தேர்தல் நிறுத்தப்படுதல்**

**6.11.1** தேர்தலின் ஏதேனும் ஓர் கட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளுக்கு கலகம் மற்றும் வன்முறைகள் மூலம் குறுக்கீடுகள் மற்றும் தடைகள் ஏற்படும் நிலையிலோ அல்லது

ஏதேனும் இயற்கை பேரிடரால் தேர்தலை மேற்கொண்டு நடத்த இயலாத நிலையிலோ, தேர்தல் அலுவலர், அதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு, தேர்தலை நிறுத்துவதற்கு அதிகாரம் பெற்றவராவார். (இது பற்றிய ஆணையத்தின் சுற்றறிக்கை ந.க.1153/2020/கூதே3 நாள் 26.09.2022 இணைப்பு–15)

**6.11.2.** அவ்வாறு தேர்தல் நிறுத்தப்பட்டால், அதன் விவரத்தை தேர்தல் அலுவலர் உடனே அறிவிப்பதுடன் மாவட்ட தேர்தல் அலுவலர், மாநில தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் ஆணையம் ஆகியோருக்கும் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

**6.12. தேர்தல் தொடர்பான குற்றச் செயல்கள் மற்றும் தண்டனைகள் சட்டம் (பிரிவு 162)**

6.12.1. சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்தல் மற்றும் நிர்வாகிகள் தேர்தல் ஆகியவற்றை சுதந்திரமான, நியாயமான வகையில் (free and fair) நடைபெறுவதை தேர்தல் பணியாற்றும் அனைத்து அலுவலர்களும் உறுதி செய்தல் வேண்டும்.

6.12.2. இத்தேர்தல்களில் முறையற்ற நடவடிக்கைகளில் (corrupt practice) ஈடுபடும் எந்த ஓர் நபரும் கூட்டுறவுச் சட்டம் பிரிவு 162-ன் கீழ் கடுமையான தண்டனைக்கு உள்ளாவர்.

6.12.3. அடியிற்கண்டவைகள் பிரிவு **162**-ன் கீழ் குற்றச் செய்கைகள் (corrupt practice) எனச் சொல்லப்பட்டவையாகும்.

**(1)** எந்த ஒரு வேட்பு மனுவினையும் மோசடியாக (fraudulently) நாசப்படுத்துதல் (defaces) மற்றும் அழித்தல் (destroy);

**(2)** அதிகாரம் பெற்ற மற்றும் அதிகாரம் அளிக்கப்பட்ட எந்த ஒரு நபராலும் ஒட்டப்பட்ட பட்டியல், அறிவிப்பு அல்லது இதர ஆவணங்களை, மோசடியாக நாசம் செய்தல், அழித்தல் அல்லது அகற்றுதல்;

**(3)** வாக்குச்சீட்டு மற்றும் வாக்குச்சீட்டில் உள்ள குறி, அல்லது அடையாளம் பற்றிய உறுதிமொழி ஆகியவற்றை மோசடியாக நாசப்படுத்துதல், அழித்தல்;

**(4)** உரிய அதிகாரமின்றி எந்த ஒரு நபருக்கும் வாக்குச்சீட்டு வழங்குதல், அல்லது எந்த ஒரு நபரிடமிருந்தும் வாக்குச்சீட்டைப் பெறுதல், அல்லது வாக்குச்சீட்டினை வைத்திருத்தல்;

**(5)** அதிகாரப்படுத்தப்பட்டபடி போட வேண்டிய வாக்குச்சீட்டு அல்லாமல், ஏதேனும் ஓர் வாக்குப்பெட்டியில் வேறு ஏதேனும் பொருட்களை போடுதல் (put).

**(6)** உரிய அதிகாரமின்றி தேர்தலுக்கான பயன்பாட்டிலுள்ள எந்த ஒரு வாக்குப்பெட்டியினை அல்லது

வாக்குச்சீட்டுகளை உரிய அதிகாரமின்றி அழித்தல், எடுத்தல், திறத்தல் அல்லது குறுக்கீடு (interfere) செய்தல்;

**(7)** மோசடியாகவோ, அல்லது முறையான அதிகாரமின்றியோ (due authority), மேற்கண்ட செய்கைகளைச் செய்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு நன்கு தெரிந்து உதவியாகவும் உடந்தையாகவும் (wilfully aids and abets) இருத்தல்; அல்லது

**(8)** அடியிற்குறிப்பிட்ட செயல்களை உள்ளடக்கிய சில செயல்களைச் செய்யும் நோக்கத்துடன், எந்த ஒரு நபருக்காவது, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்த ஓர் பரிசு (gift) வழங்குதல் மற்றும் ஏதேனும் சன்மானம் (gratification) வழங்குவதாக உறுதியளித்தல்:

**(i)** தேர்தலில் ஒருவர் வேட்பாளராக போட்டியிடுவதற்கு அல்லது போட்டியிடாமல் இருப்பதற்கு அல்லது போட்டியிலிருந்து விலகிக் கொள்வதற்கு (withdraw) அல்லது விலகாமல் இருப்பதற்கு; அல்லது

**(ii)** ஓர் உறுப்பினர் (member) தேர்தலில் வாக்களிக்க அல்லது வாக்களிக்காமல் இருக்க அல்லது ஒரு நபர் தான் வேட்பாளராக போட்டியிட்டதற்கு அல்லது போட்டி இடாமல் இருந்ததற்கு அல்லது தனது வேட்பினை திரும்ப பெற்றதற்கு

அல்லது பெறாமாலிருந்ததற்கு ஓர் பரிசாகவோ (reward); அல்லது

(iii) ஓர் உறுப்பினர் தேர்தலில் வாக்களித்தற்கு அல்லது வாக்களிக்காது இருந்ததற்கு.

**6.13. குற்றச் செயலுக்கான தண்டனை**

இப்பிரிவின் கீழான குற்றச் செய்கை புரிவோர், இப்பிரிவின்கீழ் ஓராண்டுவரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் ரூபாய் பத்தாயிரம் அல்லது இரண்டும் சேர்ந்த தண்டனைக்குரியவராவர்.

**7. தேர்தல் அலுவலரின் சட்டப்பூர்வ கடமை**

கூட்டுறவு சங்க தேர்தல் நடவடிக்கைகளில் இறுதியானதும் மிக முக்கியமானதும் மேலே விவரிக்கப்பட்ட தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல் நடவடிக்கையாகும். இதனை மேற்கொள்ளும் தேர்தல் அலுவலர் மிகக் கவனமுடனும், பொறுப்புடனும், விருப்பு வெறுப்பின்றி நடுநிலையோடும் செயலாற்றி ஒரு சுதந்திரமான, நியாயமான (Free and Fair) தேர்தலை உறுதி செய்ய வேண்டியது அவருக்கேற்பட்ட சட்டபூர்வ கடமையாகும்.

## இணைப்பு – 1

**(பத்தி 2.1.3)**

**பல வகைச் சங்கங்களின் பிரிவு மற்றும் வகைகள்**

**(1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்க விதிகள், விதி எண்.14)**

| வ.எண் | பிரிவு | வகை |
|---|---|---|
| 1. | வேளாண் உற்பத்தியாளர்கள் விற்பனைச் சங்கம் | - |
| 2. | வேளாண் பொறியியல் சங்கம் | - |
| 3. | நுகர்வோர் சங்கம் | (i) நகர்ப்புற பண்டக சாலை<br>(ii) ஊரகப் பண்டக சாலை |
| 4. | கூட்டுறவு ஒன்றியம் | - |
| 5. | கடன் சங்கம் | (i) விவசாய சேவைச் சங்கம்<br>(ii) வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி<br>(iii) நிதி உதவி வங்கி<br>(iv) நகர வங்கி<br>(v) நகர கடன் சங்கம்<br>(vi) பணியாளர் கடன் சங்கம் |

| | | |
|---|---|---|
| 6. | பால் வளச் சங்கம் | (i) பால் உற்பத்தியாளர்கள் சங்கம்<br>(ii) பால் நுகர்வோர் சங்கம்<br>(iii) பால் விநியோகச் சங்கம்<br>(iv) பால் விநியோக ஒன்றியம்<br>(v) பால் பண்ணை |
| 7. | பண்ணைச் சங்கம் | (i) இணைப்புப் பண்ணைச் சங்கம்<br>(ii) சேர்க்கைப் பண்ணைச் சங்கம்<br>(iii) குத்தகைக்குப் பயிரிடுவோர் பண்ணைச் சங்கம்<br>(iv) நிலக் குடியேற்றச் சங்கம்<br>(v) கிராமதான் சர்வோதயச் சங்கம்<br>(vi) பூதான் பணிச் சங்கம் |
| 8. | மீனவர் சங்கம் | |
| 9. | வீட்டு வசதிச் சங்கம் | (i) கட்டிட (வீட்டு வசதி) சங்கம்<br>(ii) வீட்டுவசதி கட்டிடச் சங்கம்<br>(iii) வீடு கட்டும் சங்கம்<br>(iv) நகர் உருவாக்கம்<br>(v) வாடகை குடியிருப்போர் வீட்டு வசதிச் சங்கம்<br>(vi) ஊரக வீட்டு வசதிச் சங்கம்<br>(vii) வீட்டு மனைச் சங்கம்<br>(viii) வீட்டுச் சேவைகள் சங்கம் |
| 10. | தொழிற் சங்கம் | (i) கைவினைஞர்கள் தொழிற் சங்கம் |

| | | |
|---|---|---|
| | | (ii) தொழில் நுட்பப் பணியாளர் தொழிற் சங்கம்<br>(iii)உற்பத்தியாளர் தொழிற் சங்கம்<br>(iv) தொழில் சேவை சங்கம் |
| 11. | தொழில் ஒப்பந்த சங்கம் | - |
| 12. | இறைவை நீர்ப் பாசனச் சங்கம் | - |
| 13. | பல்வகைச் சங்கம் | (i) முடிதிருத்துவோர் சங்கம்<br>(ii) கால்நடை அல்லது வாத்து, வெள்ளாடு அல்லது பன்றி அல்லது கோழி அல்லது செம்மறி ஆடு இனப்பெருக்க சங்கம்<br>(iii) இந்திய மருத்துவ தொழில் செய்வோர் மருந்தகம்<br>(iv) இதர பல்வகைச் சங்கம்<br>(v) அச்சகம்<br>(vi) ஊரக மின்சாரச் சங்கம்<br>(vii) உப்புத் தொழிலாளர் சங்கம்<br>(viii)சலவைச் சங்கம் மற்றும்<br>(ix) எழுத்தாளர் சங்கம் |
| 14. | எண்ணெய் வித்துக்கள் பயிரிடுவோர்கள் சங்கம் | |

| | | |
|---|---|---|
| **15.** | பதனிடும் சங்கம் | (i) சர்க்கரை ஆலை<br>(ii) நூற்பு ஆலை<br>(iii)துணி நூல் பதனிடும் ஆலை<br>(iv)தொழிலியல் தேயிலைத் தொழிற்சாலை |
| **16.** | பயிற்சி நிலையங்கள் | - |
| **17.** | நெசவாளர் சங்கம் | - |
| **18.** | பட்டுப் புழு வளர்ப்பு சங்கம் | - |

**(Annexure in English)**

| **Sl.No.** | **Class** | **Category** |
|---|---|---|
| 1 | Agricultural Producers Marketing | - |
| 2 | Agro-Engineering Society | - |
| 3 | Consumer Society | (i) Urban Stores<br>(ii) Rural Stores<br>(iii) Staff and Students Stores<br>(iv) Employees Stores<br>(v) Canteen and Restaurant |
| 4 | Co-operative Union | - |
| 5 | Credit Society | (i) Agricultural Service Society |

| | | |
|---|---|---|
| | | (ii) Land Development Bank<br>(iii) Financial Bank<br>(iv) Urban Bank<br>(v) Urban Credit Society<br>(vi) Employees Credit Society |
| 6 | Dairy Society | (i) Milk Producers Society<br>(ii) Milk Consumers Society<br>(iii) Milk Supply Society<br>(iv) Milk Supply Union<br>(v) Diary Farm |
| 7 | Farming Society | (i) Joint Farming Society<br>(ii) Collective Farming Society<br>(iii) Tenant Farming Society<br>(iv) Land Colonisation Society<br>(v) Gramdhan Sarvodaya Society<br>(vi) Bhoodan Service Society |
| 8 | Fisheries Society | |
| 9 | Housing Society | (i) Building (Housing) Society<br>(ii) Housing Building Society<br>(iii) House Construction Society<br>(iv) Township |

| | | |
|---|---|---|
| | | (v) Tenancy Housing Society<br>(vi) Rural Housing Society<br>(vii) House Sites Society<br>(viii) House Service Society |
| 10 | Industrial Society | (i) Artisans Industrial Society<br>(ii) Technicians Industrial Society<br>(iii) Producers Industrial Society<br>(iv) Industrial Service Society |
| 11 | Labour Contract Society | |
| 12 | Lift Irrigation Society | |
